# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040896

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 5 Date: நாள் 21.09.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7 A r/w 12.
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 20.9.2024 Date to : நாள் வரை Prior to 18.15 hrs.
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.09.2024 Time : நேரம் 10.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.09.2024 Time : நேரம் 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் City Livelihood Centre Udhagamandalam, the Nilgiris 2 km - West.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. H. Prakash (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Husur Sarishtadar (General) (g) Address : முகவரி Special District Inspection Cell Officer, Udhagamandalam

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. R. Yamini, Community Organizer City Livlihood Centre, Udhagamandalam
   2) Tmt. D. Premalatha, Community Resource Person. CLC, Udhagamandalam.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

*Separate Sheet Enclosed.*

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

*21/09/2024*

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
*21/09/24*

15. Date & Time of despatch to the court: *21.09.2024 12.00 hrs.*
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் *A.T. Jai Kumar*
Rank: நிலை *DSP* No. எண் .........
*VEAC, The Nilgiris.*

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2024/AC/NI, u/s 7 A r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

இன்று 21.09.2024-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி அ.தி.ஜெய் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (பொது) பொறுப்புசிறப்புமாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2024, u/s 7 A r/w 12 of PC Act, 1988 as amended by PC (Amendment) Act, 21018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. ஐயா, பொருள்: நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம் நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடத்தில் இயங்கிவரும் உதகமண்டலம் நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் 20.09.2024-ம் தேதி 18.15 மணிமுதல் 23.45 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பாளர் (பொது) ஆக பணிபுரிந்து வருகிறேன். நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட காந்தல் பென்னட் மார்க்கெட்டைச் சேர்ந்த 15 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் நொண்டிமேட்டைச் சேர்ந்த 20 மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வங்கிக்கடன் கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத்ததற்காக நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் பணிபுரியும்

சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி.R.யாமிணி மற்றும் சமுதாய வள பயிற்றுனர் திருமதி.A.பிரேமலதா நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் வைத்து 20.09.2024-ம் தேதி மாலை மகளிர் சுய உதவிக் குழுக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப் பெறுவதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு Pdl.A2.No.30/2024, நாள்:20.09.2024-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அ.தி.ஜெய் குமார் மற்றும் காவல் குழுவினருடன் உதகமண்டலம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சாலையில் உதகமண்டலம் அப்பர் பஜாரை இணைக்கும் வழித்தடத்தில் இடதுபுறமாக அமைந்துள்ள நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன். அந்த திடீர் ஆய்வின்போது நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு: அந்த திடீர் ஆய்வானது உதகமண்டலம் நகராட்சி வாழ்வாதார மையத்தில் 20.09.2024-ம் தேதி 18.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. உதகமண்டலம் நகராட்சி தொடக்கபள்ளி கட்டிடத்தில் வடக்கு நோக்கி இருக்கும் வாசலில் நுழைந்தபோது பெண்கள் கூட்டமாக இருந்தனர். காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களில் ஒருவரை விசாரிக்க, தான் கார்குழல் மகளிர் சுய உதவிக்குழுவை சார்ந்தவர் என்றும், அந்த அறையில் மேற்கு நோக்கி இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பெண்மணி ஒருவரை காண்பித்து, சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி.யாமிணி அவர்களை தங்கள் குழுவினருடன் பார்க்க வந்திருப்பதகாக தெரிவித்தார். பின்னர் திருமதி.யாமிணி என்பவரிடம் காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, என்னையும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, எங்களுடைய உடைமைகளை காண்பித்தும், உதகமண்டலம் நகர்ப்புற வாழ்வாதார மையத்தை திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தார். பின்னர் அவரை விசாரிக்க தனது பெயர் R.யாமிணி என்றும், தான் உதகமண்டலம் நகராட்சியில் 2010-ம் வருடம் சமுதாய ஒருங்கிணைப்பாளராக பணியில் சேர்ந்தும், 2016-ம்

வருடம் முதல் அயல்பணியில் உதகமண்டலம் மகளிர் திட்டத்தில் சமுதாய ஒருங்கிணைப்பாளராக உதகமண்டலம் நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.P.சாதனபிரியா உதவியுடன் தணிக்கை செய்ய தனது ஹேண்ட்பேக்கிலிருந்து பணம் ரூ.1,300/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க வீட்டிலிருந்து கை செலவிற்காகவும், மருத்துவ செலவிற்காகவும் எடுத்துவந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.1,300/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையின் வடக்கு சுவற்றையொட்டி தெற்கு நோக்கி இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் விசாரிக்க தன்னுடைய பெயர் A.பிரேமலதா என்றும், தான் 2019-ம் வருடம் முதல் உதகமண்டலம் நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் சமுதாய வள பயிற்றுனராக தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை காவல் உதவி ஆய்வாளர் திருமதி.P.சாதனபிரியா உதவியுடன் தணிக்கை செய்யப்பட்டது. பின்னர் அவர் அமர்ந்திருந்த இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரது மேசையின் வலதுபுற மேல் அறையில் ஒரு வெள்ளைநிற பிளாஸ்டிக் டப்பாவில் 500 ரூபாய் கட்டுகள் இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்க்க 500 ரூபாய் தாள்கள் 758 எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள்கள் 13 எண்ணிக்கையிலும், 100 ரூபாய் தாள்கள் 72 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் ரூ.3,88,800/- இருந்தது. அந்த பணம் குறித்து விவரம் கேட்க, சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி.யாமிணி அவர்கள் அறிவுரைப்படி தான் பணத்தை வசூல் செய்து வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த பணம் குறித்து சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி.யாமிணி அவர்களிடம் விவரம் கேட்க, 35 கூட்டமைப்பு குழுக்களுக்கு ரூ.1,75,00,000/- வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த பணத்தைப்பெற்ற நொண்டிமேட்டைச் சேர்ந்த பகுதி அளவிலான கூட்டமைப்பு மகளிர் சுய உதவிக்குழுக்கள் 1) அத்திப்பூ, 2) ரோஜா, 3) மாஷா அல்லாஹ், 4) சுபிக்ஷம், 5) கார்குழல், 6) ஸ்ரீ சக்தி விநாயகா, 7) ஓம் சக்தி மற்றும் 8) ஜெய்ஹிந்த் மூலம் மொத்தம்

ரூ.2,59,200/-ம், காந்தல் பென்னட் மார்க்கெட் பகுதி அளவிலான கூட்டமைப்பு மகளிர் சுய உதவிக்குழுக்கள் 1) குறிஞ்சி மலர், 2) சான்வி, 3) இரக்கத்தின் அன்னை மற்றும் 4) இமானுவேல் மூலம் ரூ.1,29,600/- ஆக மொத்தம் ரூ.3,88,800/- வசூல் செய்து வைத்திருப்பதாக தெரிவித்தார். மேலும், திருமதி.யாமிணி அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கொடுக்கும் கடன் தொகையிலிருந்து முதலாவது தவணை தொகையாக 10 நபர்களுக்கு ரூ.2,000 வீதம் ரூ.20,000/- என 12 குழுக்களுக்கு ரூ.2,40,000/-ம், குழு சீருடை புடவைக்காக 10 நபர்களுக்கு ரூ.1,000/- வீதம் ரூ.10,000/- என 12 குழுக்களுக்கு ரூ.1,20,000/-ம், வருடாந்திர சந்தாவாக குழு ஒன்றிற்கு மாதம் ரூ.200/- வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.2,400/-என 12 குழுக்களுக்கு ரூ.28,800/-ம் வசூல் செய்து வைத்திருப்பதாக தெரிவித்தார். மேலும் அவர் உதகமண்டலம், கூட்டுறவு வங்கி மார்க்கெட் கிளை மேலாளர் அறிவுரைப்படிதான் தவணை தொகையை பிடித்தம் செய்துள்ளதாக தெரிவித்தார். மேலும் அதற்காக தான் மகளிர் சுய உதவிக்குழுக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதற்காக ரசீதுகள் எதுவும் வழங்கவில்லையென தெரிவித்தார். தகவலின்பேரில் உதகமண்டலம், மகளிர் திட்டம், உதவி திட்ட அலுவலர் திருமதி.ஜெயராணி என்பவர் சுமார் 20.15 மணிக்கு நகர்ப்புற வாழ்வாதார மையம் வந்தார். அவரிடம் திருமதி.யாமிணி, நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினரிடமிருந்து வசூல் செய்துள்ள தொகை பற்றி கேட்க, வங்கிக்கடன் பெற்ற தேதியிலிருந்து ஒருமாதம் கழித்து சம்மந்தப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தவணை தொகையை வங்கியில் நேரடியாகவும் அல்லது தீர்மானம் நிறைவேற்றி குழு உறுப்பினர்களிடமிருந்து தவணை தொகையை பெற்று அந்த குழுவின் பிரதிநிதிகள் வங்கியில் செலுத்த வேண்டும். நகர்புற வாழ்வாதார மைய அலுவலர்கள் தவணை தொகையை பெற்று வங்கியில் செலுத்த அதிகாரம்இல்லை. மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்களிடமிருந்து எந்த வகையிலும் நகர்ப்புற வாழ்வாதார மைய சமுதாய ஒருங்கிணைப்பாளர் பணத்தினை வசூல் செய்யக்கூடாது என தெரிவித்தார். சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி.யாமிணி சொன்ன முகாந்திரம் ஏற்றுக்

கொள்ளத்தக்க வகையில் இல்லாததால் அந்த பணம் ரூ.3,88,800/- மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் வங்கிக்கடன் கிடைக்க ஏற்பாடு செய்தமைக்காக பெறப்பட்ட கையூட்டு பணமாக இருக்கக்கூடும் என கருதி பணம் ரூ.3,88,800/- காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும், திருமதி.பிரேமலதா அவர்களின் மேசையின் வலதுபுற மேல் அடுக்கில் கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் தாள்கள் 29 எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள் ஒன்றும் மற்றும் 100 ரூபாய் தாள் ஒன்றும் மொத்தம் ரூ.14,800/- இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி.பிரேமலதா அவர்களிடம் கேட்க, அவர் எந்தவித முகாந்திரமும் கூறாததால், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ததற்காக கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்பதால் அந்த பணம் ரூ.14,800/- செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும், நகர்ப்புற வாழ்வாதார மையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்து சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி.யாமிணி அவர்களிடம் கேட்க, CLC Cash Book (2) Indian Bank என எழுதப்பட்ட ஜனவரி 2024 முதல் ஜூலை 2024 என 10-ம் தேதி வரை எழுதப்பட்டுள்ள பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டில் 10.07.2024-ம் தேதி வரை பதிவுகள் உள்ளது. அந்த பதிவேட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் கையொப்பம் செய்து சம்மந்தப்பட்ட பக்கத்தின் ஒளி நகல் எடுத்து செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றியபின் செயல்முறை நடவடிக்கை 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,03,600/-ம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திருமதி.J.ஜெயராணி, உதவி திட்ட அலுவலர், மகளிர் திட்டம், உதகமண்டலம் அவர்களின் வாக்குமூலம் இத்துடன் இணைத்துள்ளேன். மேற்படி நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் H.பிரகாஷ், உதகமண்டலம், 21.09.2024. Submitted: I have received a complaint from

Tr.H.Prakash, Husur Sarishtadar (General), Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam, the Nilgiris on 21.09.2024 at 10.00 hrs and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.5/2024 u/s 7A r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ஒப்பம் அ.தி.ஜெய் குமார் 21.09.2024 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், செயல்முறை நடவடிக்கை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,03,600/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

21.09.24

A.T. Jaikumar,
Deputy Supt. of police,
V & AC, Nilgiris